செ.வெ.எண்: 05 நாள்: 03.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி சிறப்புநிலை பேரூராட்சியில் கொரோனா நோய் தொற்று தொடர்பான வணிகர்களின் கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி சிறப்புநிலை பேரூராட்சியில் பேராலய புதிய திருமண மண்டபத்தில் நடைபெற்ற கொரோனா நோய் தொற்று தொடர்பான வணிகர்களின் கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று 03.08.2021 நடைபெற்றது.

வேளாங்கண்ணி சிறப்புநிலை பேரூராட்சி பகுதியில் உலக சுகாதார நிறுவனத்தால் அபாயகரமான தொற்று நோயாக அறிவிக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவாத வண்ணம் பேரூராட்சி பகுதியில் பொது மக்கள் கூடும் இடங்கள், மார்க்கெட், பேருந்து நிலையம், பூங்காக்கள், கோயில்கள் மற்றும் தேவாலயங்களில் பொது சுகாதார கிருமிநாசினிகள் தெளித்து கொரோனா வைரஸ் பரவாத வண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழக அரசின் அறிவுறுத்தலின் பேரிலும், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறைகளின்படியும், கொரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டு அதன்படி 01.08.2021ம் தேதி முதல் 07.08.2021 தேதி வரை பொது மக்களுக்கு பல்வேறு விதமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

எனவே இப்பேரூராட்சியானது உலக பிரசித்திபெற்ற புனித ஆரோக்கிய மாதா திருத்தலம் அமைந்த முக்கிய சுற்றுலா தலமாக உள்ளதால், நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருப்பயணிகள் வெளி மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிருந்து வருகை புரிவதால், மேற்படி கொரோனா வைரஸ் தொற்று நோய் மூன்றாவது அலை பரவாத வண்ணம் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் விழிப்புணர்வுகள் ஏற்படுத்துவது குறித்த கலந்தாய்வு கூட்டம் நடைபெறுகிறது.

எனவே பொதுமக்கள், வணிகர்கள் அனைவரும் முகக்கவசம் அணியவும், கைகளை அடிக்கடி கிருமி நாசினி அல்லது சோப்பு கொண்டு சுத்தம் செய்யவும், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். மேலும் வேளாங்கண்ணி, நாகூர் போன்ற முக்கிய சுற்றுலாத் தளங்களில் மக்கள் அதிகமாக கூடாதவாறும், வெளி மாநிலம் மற்றும் மாவட்டங்களிலிருந்து வரும் திருப்பயணிகள் பாதையாத்திரையாக வருவதை தவிர்த்து கொரோனா தொற்று பரவாமல் தடுப்பதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறும் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வேளாங்கண்ணி பேராலய அதிபர் திரு.எ.எம்.எ.பிரபாகர், வேளாங்கண்ணி செயல் அலுவலர் திரு.பொன்னுசாமி, வட்டார மருத்துவ அலுவலர் திரு.அரவிந்த், மற்றும் வர்த்தக சங்க பிரதிநிதிகள், தங்கும் விடுதி மற்றும் உணவக உரிமையாளர் சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**